

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு , முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளை முன்னிட்டு , தில்லை நகரில் உள்ள அலுவலகத்தில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் மு அன்பழகன், எம்எல்ஏ ஸ்டாலின் குமார், மத்திய மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்லும், விஜயா ஜெயராஜ், கருணாநிதி பொருளாளர் துரைராஜ், மாத்தூர் கருப்பையா , டோல்கேட் சுப்பிரமணி, தர்மன் ராஜேந்திரன் கதிர்வேல் ,கே என் சேகரன் , தொமுச மாவட்ட செயலாளர் குணசேகர், மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, உத்தமர்சிவி ராஜேந்திரன், கலைமற்றும் கழக நிர்வாகிகள் விஜயலட்சுமி கண்ணன் ,மோகன் தாஸ், போட்டோ கமல், வாமடம் சுரேஷ்முத்து பழனி ,எம் ஆர் எஸ் குமார் ,கார்த்திக் ,தாஹிர் உட்படப்பலர் கலந்து கொண்டனர்

## இலக்கிய மாமணி – கழக முன்னோடி மறைந்த

# திருவாரூர் அர.திருவிடத்திற்கு புகழ் வணக்கம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.18-

இலக்கிய மாமணி திருவாரூர் அர.திருவிடம் மறைவுக்கு கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட இயக்க வரலாற்றை 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' என்ற தலைப்பில், நூலாகத் தொகுத்து வெளியிட்ட 'இலக்கிய மாமணி' திருவாரூர்

அர.திருவிடம் மறைந்தார்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், திராவிட இயக்கத்துக்கு அடித்தளமிட்ட 'திருவாரூர் தண்டவாளம்' அரங்கராஜன் அவர்களின் மகன் திருவாரூர் அர.திருவிடம் அவர்கள், தன் இளம் வயதில் இருந்தே திராவிட இயக்கத்துக்குப் பாடுபட்டவர். தந்தை பெரியாரால் பெயர் சூட்டப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட அய்யா திருவிடம் அவர்கள், திருவிடம் என்ற பெயரிலேயே ஒரு மாத இதழை கால் நூற்றாண்டுக்கு மேல் நடத்திய இதழாசிரியர். திருவாரூர் தங்கராசு, ஆசிரியர் கி.வீரமணி, சி.பி.சிற்றரசு, நெ.து.சுந்தர வடிவேலு போன்ற திராவிட இயக்க முன்னோடிகள் பலர், திருவிடம் இதழில், கட்டுரைகள் தீட்டியுள்ளனர்.

தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளராக கழகப் பணியாற்றி வந்த அவர், 'கலகக்காரி', 'கலைஞரின் காலடிச் சுவடுகள்',

'தி.மு.க. பெற்ற வெற்றிகளும் வீரத்தழும்புகளும்', 'திராவிடப் புதையல்' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். திராவிட இயக்க வரலாற்றைத் தாண்டி, 'குடியுரிமைத் தடுப்புச் சட்டம்', 'காந்தி கோட்சே', 'வேண்டாம் தூக்கு' உள்ளிட்ட சமகால அரசியல் நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

கழக இளைஞர் அணிச் செயலாளராக நான் பொறுப்பேற்ற புதிதில், திராவிட இயக்கத்தின் வரலாற்றைத் தொகுத்து, அவர் எழுதி இருந்த 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' புத்தகத்தை, பெரியார் திடலில் வெளியிட்டு உரையாற்றுகிற வாய்ப்பைத் தந்தார். தகவல் களஞ்சியமான அந்நூலை வாசித்து, நான் மேற்கொண்ட தயாரிப்புப் பணிகளை இன்று நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

திருவிடம் அவர்களின் தந்தை அரங்கராஜன் அவர்கள் 1959-இல் மறைந்தபோது, அர.திருவிடத்தின் படிப்பு, குடும்பப் பராமரிப்பு ஆகிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதனாலேயே, 'நான் ஆளாக்கிய பிள்ளை' என்று எப்போதும் திருவிடத்தைக் குறிப்பிடுவார்.

பின்னாளில் பகுத்தறிவுப் பாசறையின் தலைமைக் கழக அமைப்பாளராகவும், தமிழ்நாடு அரசின் சமூக சீர்திருத்தக் குழு உறுப்பினராகவும் இருந்தார் அய்யா அர.திருவிடம். நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 2022-ஆம் ஆண்டு அவருக்கு 'இலக்கிய மாமணி' விருதையும் வழங்கி கவுரவித்தது.

எழுத்துப் பணியையே தனது இறுதிக்காலம் வரை மேற்கொண்டிருந்த, திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி அண்ணன் திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் இழப்பு, திராவிட இயக்கத்துக்கு மிகப் பெரிய பேரிழப்பு. அண்ணன் திருவிடத்தை இழந்து வாடும் அவரது அன்புமகன் செழியன் உள்ளிட்ட குடும்பத்தார் நண்பர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் என்னுடைய ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம்

# தஞ்சை எஸ்.சதாசிவம் மறைவு!

## மாவட்டச்செயலாளர் துரை.சந்திரசேகரன்எம்.எல்.ஏ - ச.முரசொலி எம்.பி நேரில்அஞ்சலி!

*தஞ்சாவூர், ஆக.18 -*

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம் பகுதிச் செயலாளர் எஸ்.சதாசிவம் (வயது 75) நேற்று (17.08.2025) காலை 8.30 மணியளவில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த சதாசிவம் அவர்கள் தஞ்சை பகுதியில் இயங்கி வந்த பஞ்சாலை தொ.மு.ச தலைவராகவும், வட்டக் கழக செயலாளராகவும், நகர மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வைத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும், இளந்தலைவர்மீதும் மாறா பற்று கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டம் போராட்டங்களில் பங்கு பெற்று சிறை சென்றவர். இவருக்கு மனைவி மற்றும் மூன்று பெண் பிள்ளைகள் உள்ளார்கள்.

அன்னாரின் மறைவு செய்த அறிந்த தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ,ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச்செயலாளர். சண்.இராமநாதன், துசெல்வம், சி.இறைவன், துணைமேயர்அஞ்சகம்பூபதி, எஸ்.சி.மேத்தா, ஆர்.கே.இநீலகண்டன்எஸ்.கார்த்தி, உள்ளிட்ட கழக நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்தநாளை முன்னிட்டு கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட முரசொலி மாறன் திருவுருவ படத்திற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இதில் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி உள்ளிட்ட மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள், வட்டச் செயலாளர்கள் சார்பு அணியின், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில், ஜவுளித் துறைக்கு இரண்டு அம்சங்களில், அதாவது, மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மதிப்புச் சங்கிலிக்கான ஜி.எஸ்.டி. விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, தலைகீழ் வரி கட்டமைப்பை சரி செய்தல், முழு சங்கிலியையும் 5% ஜி.எஸ்.டி. அடுக்குக்குள் கொண்டு வருதல் மற்றும் அனைத்து வகையான பருத்திக்கும் இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளித்தல் ஆகியவற்றில் துரித நடவடிக்கை தேவைப்படுவதாக தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதலாக, அவசரக் கடன் வரி உத்தரவாதத் திட்டத்தின் கீழ் (ECLGS) 30% பிணையமில்லாத கடன்களை 5% வட்டி மானியம் மற்றும் அசலைத் திருப்பிச் செலுத்துதலில் இரண்டு ஆண்டு தற்காலிக தடையுடன் நீட்டித்தல், RoDTEP நன்மைகளை 5% ஆக உயர்த்துதல், நூல் உட்பட அனைத்து ஜவுளி ஏற்றுமதிகளுக்கும் முன் மற்றும் பின் கடனை நீட்டித்தல் ஆகியவை நமது ஏற்றுமதி போட்டித் தன்மையை வலுப்படுத்துவதற்கான பிற முக்கியமான காரணிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**உற்பத்தித் துறைக்கு கடும் அச்சுறுத்தல்!**

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்க வரி தாக்கங்கள் மற்றும் போட்டி அழுத்தங்கள் காரணமாக மற்ற துறைகளும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கின்றன என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அதற்கு உடனடி நிவாரணம் வழங்கி, பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்கவரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதையும், அதிக சுங்க வரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்து வதையும் ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் செயல்படுத்தப்பட்டதைப் போன்று, அசலைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகை உள்ளிட்ட ஒரு சிறப்பு நிதி நிவாரணத் தொகுப்பு நமது ஏற்றுமதியாளர்களை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்றும், பிரேசில் அரசு அந்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வரி ஒத்திவைப்பு மற்றும் வரிச் சலுகைகளை அறிவித்துள்ளதைப் போன்று, இந்தியாவிலும் இதுபோன்ற ஒரு முயற்சியை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வலுவான உற்பத்தித் துறை, இதுவரை கண்டிராத ஒரு நெருக்கடியை தற்போது எதிர்கொள்வதாகவும், பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் தொழில்துறையைச்சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும் ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு முழு ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் தனது கடிதத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## மதுரை வடக்கு மாவட்டம்

# கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு, மேலூர் கிழக்கு, மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் மதுரை வடக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்றத்திற்குட்பட்ட, கொட்டாhம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி தெற்கு - மேலூர் கிழக்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஆகிய ஆறு ஒன்றியங்கள், கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு - மேலூர் கிழக்கு, மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு என 8 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு - மேலூர் கிழக்கு, மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர் கொண்டதாக அமையும்.

**கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றியம்** : 1.கொட்டாம்பட்டி, 2.பாண்டாங்குடி, 3.சொக்கலிங்கபுரம், 4.கருங்காலக்குடி, 5.சுக்காம்பட்டி, 6.வஞ்சிநகரம், 7. கச்சிராயன்பட்டி ஆகிய 7 ஊராட்சிகள்.

**கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றியம்** : 1.மணப்பச்சேரி, 2.குன்னாரம்பட்டி, 3.அய்யாபட்டி, 4.சேக்கிபட்டி, 5.கேசம்பட்டி, 6.கம்பூர், 7.பட்டூர் ஆகிய 7 ஊராட்சிகள்.

**கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றியம்** : 1.சூரப்பட்டி, 2.பொட்டப்பட்டி, 3.தொந்திலிங்கபுரம், 4.பள்ளப்பட்டி, 5.சொக்கம்பட்டி, 6.வலைசேரிபட்டி ஆகிய 6 ஊராட்சிகள்.

**கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம்** : 1.பூதமங்கலம், 2.கொடுக்கம்பட்டி, 3.அட்டப்பட்டி, 4.தும்பைப்பட்டி, 5.மேலவளவு, 6.சென்னகரம்பட்டி, 7.எட்டிமங்கலம் ஆகிய 7 ஊராட்சிகள்.

**மேலூர் கிழக்கு ஒன்றியம்** : 1.வெள்ளலூர், 2.உறங்கான்பட்டி, 3.குறிச்சிப்பட்டி, 4.கோட்டநத்தம்பட்டி, 5.அம்பலகாரன்பட்டி, 6.ஆட்டுக்குளம், 7. சருகுவலையபட்டி, 8.வண்ணாம்பாரைப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகள்.

**மேலூர் மேற்கு ஒன்றியம்** : 1.வலையபட்டி, 2.கிடாரிப்பட்டி, 3.புலிப்பட்டி, 4.சூரக்குண்டு, 5.கல்லம்பட்டி, 6.அரிட்டாபட்டி, 7.நரசிங்கம்பட்டி, 8.வெள்ளரிப்பட்டி, 9.தெற்குத்தெரு ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் அ.வல்லாளப்பட்டி பேரூர்

**மேலூர் வடக்கு ஒன்றியம்** : 1.நாவினிப்பட்டி, 2.கீழையூர், 3.கீழவளவு, 4.இ.மலம்பட்டி, 5. கொங்கம்பட்டி, 6.செம்மினிப்பட்டி, 7.தனியாமங்கலம், 8.சாத்தமங்கலம், 9. புதுச்சுக்காம்பட்டி ஆகிய 9 ஊராட்சிகள்.

**மேலூர் தெற்கு ஒன்றியம்** : 1.பதினெட்டாங்குடி, 2.பனங்காடி, 3.அரசப்பன்பட்டி, 4.கொட்டகுடி, 5.திருவாதவூர், 6.வேப்படப்பு, 7.பூஞ்சுத்தி, 8.கீரனூர், 9.டி.வெள்ளாலபட்டி, 10.ஆமூர் ஆகிய 10 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு - மேலூர் கிழக்கு, மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : எஸ்.பாலசுப்பிரமணியன் (எ) எஸ்.என்.எஸ்.ராஜ், 3/254, எஸ்.என் இல்லம், கொட்டாம்பட்டி அஞ்சல், மதுரை.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : மு.யாகியாகான் சொக்கலிங்கபுரம் அஞ்சல், மேலூர் (தா),மதுரை. த.வரதராஜன் பாண்டாங்குடி, மேலூர் (தா), மதுரை. க.கண்ணன் மணப்பட்டி, கச்சிராயன் பட்டி, மேலூர் (தா), மதுரை. வெ.சேட் (எ) தனசேகரன் கல்லம்பட்டி, கச்சிராயன்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. ச.அழகு கம்பாலிப்பட்டி, வஞ்சிநகரம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. தி.சிட்டிபாபு 4-48, நாட்டார்மங்கலம், வஞ்சிநகரம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. மு.பக்ரூதீன் 3-55, கீழத்தெரு, கருங்காலக் குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. வெ.பாண்டியன் பாண்டாங்குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. திருமதி கா.காயத்ரி, 1-110, வஞ்சிநகரம், மேலூர் (தா), மதுரை. பா.ஜெயராஜ், சுக்கம்பட்டி, மேலூர், மதுரை. திருமதி பாக்கியவதி கணேசபுரம்,சொக்கலிங்கபுரம், மேலூர், மதுரை.

### கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : செ. ராஜா , கடுமீட்டான்பட்டி, அருக்கம்பட்டி அஞ்சல், கேசம்பட்டி (உ), மதுரை மாவட்டம்.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : சி.காளிமுத்து சாணிப்பட்டி, கேசம்பட்டி அஞ்சல், மதுரை. பு.எழில் வேந்தன் தனக்கம்பட்டி, பட்டூர் (ஊ), மதுரை. ரா.குமார் அலங்காம்பட்டி அஞ்சல், கம்பூர் (ஊ), மதுரை. திருமதி அ.அனுசியா புதூர், மணப்பச்சேரி (ஊ), மதுரை. அ.ராமசாமி வெள்ளாலப்பட்டி, மணப்பச்சேரி (ஊ), மதுரை. வெ.பிரபாகரன் திருச்சுனை, அய்யாபட்டி (ஊ), மதுரை. சே.சேதுராஜன் வெள்ளினிபட்டி, மணப்பச்சேரி (ஊ), மதுரை. சே.மூர்த்தி சேக்கிபட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு, சேக்கிபட்டி, மதுரை. சி.பிரபு சேக்கிபட்டி, சேக்கிபட்டி (ஊ), மதுரை. அ.கதிரேசன் அய்வத்தான்பட்டி, கம்பூர் (ஊ), மதுரை.

### கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : பி. பழனி 24, கோனார் தெரு, தொந்திலிங்கபுரம், மேலூர். மதுரை மாவட்டம்.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : வீர.தமிழ்செல்வன் பள்ளபட்டி புதூர், மேலூர்(தா), மதுரை. பாஸ்கரன் பள்ளப்பட்டி, மேலூர்(தா),மதுரை. ராக்கப்பன் பள்ளபட்டி, பிரான்மலைரோடு, மேலூர்(தா), மதுரை. திருமதி சி.நதியா, குருவார்பட்டி, பொட்டப்பட்டி, மேலூர்(தா), மதுரை. செல்வம், பொட்டப்பட்டி வடக்கு தெரு, மேலூர்(தா), மதுரை சிவனேசன் வலைச்சேரிபட்டி, மேலூர்(தா), மதுரை. இளையராஜா, பொட்டப்பட்டி குடியிருப்பு, மேலூர்(தா), மதுரை. மங்கைபாகன், பள்ளபட்டி, மேலூர்(தா), மதுரை. பழனியப்பன், சொக்கம்பட்டி, மேலூர்(தா), மதுரை.

### கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : ஜி.ராஜராஜன், 101, மேலத் தெரு, மேலூர், மதுரை - 625106.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : க.ராமதாஸ் எட்டிமங்கலம், மேலூர்அஞ்சல், மதுரை. சொ.ராஜா அட்டப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. உ.சோனைமுத்து பூதமங்கலம் குடியிருப்பு, பூதமங்கலம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. திருமதி சி.பாண்டியம்மாள் சொக்கிழவன்பட்டி, கொடுக்கம்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. வீ.விருப்பணன் தும்பைப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. பா.பழனியப்பன், தும்பைப்பட்டி, மேலூர் (தா), மதுரை. ச.தேவதாஸ் நடுப்பட்டி, சென்னகரம்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. ஊ.கண்ணன், கண்மாய்பட்டி, மேலவளவு, மேலூர்(தா), மதுரை. வீர.சுரேஸ் 4-365 மேலவளவு காந்திநகர், மேலவளவு, மேலூர்(தா), மதுரை.

### மேலூர் கிழக்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : சி. இளங்கண்ணன், மே.ஒத்தப்பட்டி, வெள்ளலூர் ஊராட்சி, மேலூர். மதுரை மாவட்டம்.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : கா.கௌசீகன் கட்டசோலைகப்பட்டி, வெள்ளலூர் (ஊ) ரா.அபிராமி வெள்ளலூர், வெள்ளலூர் அஞ்சல்,. ச.அங்குசாமி, உரங்கான்பட்டி ஊராட்சி & அஞ்சல், மேலூர், மதுரை. கு.மாரிமுத்து கூலிபட்டி, குறிச்சிப்பட்டி (ஊ). ராமநாதன், சருகுவலையபட்டி, சருகுவலையபட்டி அஞ்சல், மேலூர், மதுரை. இளங்கோ, வெள்ளலூர் & ஊராட்சி மேலூர், மதுரை. இராமையா, அம்பலகாரன்பட்டி & அஞ்சல், மேலூர், மதுரை. ப.கம்பக்குடி, அம்பலகாரன்பட்டி (ஊ). சிவசீமான், கோட்டநத்தபட்டி & அஞ்சல், மேலூர், மதுரை. ரா. மனோகரன், புலிமலைப்பட்டி, உரங்கான்பட்டி மேலூர், மதுரை. திருமதி மா.பூமாரி, வண்ணாம்பாரைபட்டிஅஞ்சல், மேலூர், மதுரை. ம.முருகன், முத்தம்பட்டி, குறிச்சிபட்டி(ஊ), மேலூர், மதுரை.

### மேலூர் மேற்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** :வ. ரெகுபதி, வெள்ளிமலையாண்டி கோவில் தெரு, அ.வல்லாளபட்டி அஞ்சல், அழகர்கோவில் வழி, மேலூர் (தா), மதுரை -625301.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : திருமதி த.வைசாலி தெற்குத்தெரு அஞ்சல், மேலூர். ம.முத்துபொருள் அழகர்கோவில் அஞ்சல், மேலூர். கா. ராமசாமி கல்லம்பட்டி அஞ்சல், மேலூர். மு.மதிவாணன் கிடாரிப்பட்டி அஞ்சல், மேலூர். அ.வேல்சாமி சூரக்குண்டு அஞ்சல், மேலூர். ச.ராஜன் நரசிங்கம்பட்டி அஞ்சல், மேலூர். மு.தங்கம் அ.வலையப்பட்டி, அழகர்கோவில் அஞ்சல், மேலூர். ந.ராஜா புலிப்பட்டி அஞ்சல், மேலூர். ம.சந்திவீரன்செல்வம் முன்னமலைப்பட்டி, நரசிங்கம்பட்டி அஞ்சல், மேலூர்.

### மேலூர் வடக்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** :எ. செல்வராஜ், 5/135, ஆசாரிவாழ் தெரு, தீபன்ராஜ் இல்லம், கீழவளவு அஞ்சல், மேலூர் (தா), மதுரை மாவட்டம்.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : அ.மாணிக்கம் வாச்சாம்பட்டி, கீழவளவு அஞ்சல், மேலூர் (தா), மதுரை. தி.ரகு சாத்தமங்கலம், தனியாமங்கலம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. ஊ.குருநாதன் நாவினிப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. திருமதி பா.ஷாலினி நாவினிப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சை.காதர்பாட்ஷா முத்துச்சாமிபட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. செ.போஸ் தனியாமங்கலம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சு. ஜெகன்குமார் கீழையூர் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. ஆர்.கே.சுரேஷ் சிலோன் குடியிருப்பு, புதுசுக்காம்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சி. பெரியசாமி ரெங்கசாமிபுரம், கீழையூர் அஞ்சல், மேலூர் (தா), மதுரை.

### மேலூர் தெற்கு ஒன்றியம்

**பொறுப்பாளர்** : இ. இராஜேந்திரபிரபு, பூஞ்சுத்தி, மேலூர் தாலுக்கா, மதுரை மாவட்டம்.

பொறுப்பு குழு உறுப்பினர்கள் : சு.வெள்ளையன் அரசப்பன்பட்டி, செட்டிகுளம் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. த.சதீஸ்குமார் பதினெட்டாங்குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சு.பாலசுப்பிரமணியன் வேப்படப்பு, பூஞ்சுத்தி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. திருமதி ச.அஜிதா சரவணன் கொட்டக்குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. பொ. குமாரசாமிராஜா திருவாதவூர் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சு.முருகன் திருவாதவூர் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. ப.பாக்கியம்தெற்காமூர் அஞ்சல், மேலூர் (தா), மதுரை. சீ.சசிகுமார் கொட்டக்குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை. மெ.ராமசாமி பெருங்காலகுடி, கொட்டக்குடி அஞ்சல், மேலூர் (தா), மதுரை.

### அ.வல்லாளப்பட்டி பேரூர்

**பொறுப்பாளர்** : ஆர். குமரன், 10-1-32, நடுவளவு மந்தை தெரு, அ.வள்ளாலப்பட்டி, மேலூர், மதுரை.

**பொறுப்பு குழு உறுப்பினர்கள்** : அ.ராமு நடுவளவு, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301. வெ.பெரியகருப்பன் முத்திரையர் தெரு, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301 ரெ.முன்னமலை தெற்கு காலனி, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301 மோ.கற்பகம் அரியப்பன் பட்டி, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301. ஷா.அன்வர்பேக்

முஸ்லிம் தெரு, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301. வீ.மோகன் நடுவளவு, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301. மு.அஜ்மீர்கான் முஸ்லிம் தெரு, அ.வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301. மு.ரகுமத்துல்லா முஸ்லிம் தெரு, அ. வல்லாளப்பட்டி அஞ்சல், மேலூர் (தா), மதுரை -625301.

**'அண்ணா அறிவாலயம்'**
சென்னை - 18.
நாள் : 16.8.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.